


ISSN: 2582–5518

புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வியாழன் ❖ ஜூலை. 20, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 286 ❖ ரூ.10

மணிப்பூர் உள்ளிட்ட அனைத்து விவகாரங்களையும் நாடாளுமன்றத்தில் விவாதிக்க தயார்

# மத்திய அரசு

## கூட்டத் தொடரில் 32 மசோதாக்கள் தாக்கல் செய்ய அரசு திட்டமிட்டல்: மாநில அரசுகள் மீது மத்திய அரசால், தொடுக்கப்படும் தாக்குதல்கள் குறித்து கேள்வி எழுப்புவோம் காங்கிரஸ் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ்



புதுடெல்லி , ஜூலை.20–

மணிப்பூர் விவகாரம் உள்ளிட்ட அனைத்து விவகாரங்கள் குறித்தும் விவாதிக்க அரசு தயார் என்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் பிரஹலாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் இன்று தொடங்க உள்ள நிலையில், டெல்லியில் நேற்று அரசு சார்பில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் பிரஹலாத் ஜோஷி, "மழைக்கால கூட்டத் தொடரில் விதிகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட மற்றும் சபாநாயகரால் அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு பிரச்சினை குறித்தும் விவாதிக்க அரசு தயாராக உள்ளது.

குறிப்பாக, எதிர்க்கட்சிகளால் அடிக்கடி எழுப்பப்படும் மணிப்பூர் விவகாரம் குறித்தும் அரசு விவாதிக்கத் தயார். இந்த கூட்டத் தொடரில் 32 மசோதாக்கள் தாக்கல் செய்ய அரசு திட்டமிட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

முன்னதாக, சபாநாயகர் ஓம்பிர்லா விடுத்த அழைப்பின் பேரில் நடைபெற்ற வணிக ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பங்கேற்ற பிரஹலாத் ஜோஷி, அப்போதும், மணிப்பூர் உள்பட அனைத்து பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்க அரசு தயார் என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ், "வரக்கூடிய நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் மணிப்பூர் விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் எனும் கோரிக்கையை முதலில் எழுப்புவோம். மணிப்பூரில் அமைதியை நிலைநாட்ட அரசு எத்தகைய வியூகத்தைக் கொண்டிருக்கிறது என்பது குறித்து பிரதமர் மோடி தெரிவிக்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துவோம்.

இரண்டாவதாக, ஜனநாயகபூர்வமான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகள் மீது மத்திய அரசால், மோடி அரசால் தொடுக்கப்படும் தாக்குதல்கள் குறித்து கேள்வி எழுப்புவோம். ஆளுநர்கள், துணைநிலை ஆளுநர்களைக் கொண்டும், அவசரச் சட்டங்கள் மூலமாகவும் மத்திய அரசு, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

மத்திய விசாரணை அமைப்புகளைக் கொண்டு தமிழகம் போன்ற மாநிலங்களில் அமைச்சர்களின் வீடுகளில் சோதனை மேல் சோதனை நடத்தப்படுவது குறித்தும், மகாராஷ்டிராவில் தேசியவாத காங்கிரஸ் கட்சி உடைக்கப்பட்ட விதம் குறித்தும் நாங்கள் நாடாளுமன்றத்தில் எழுப்புவோம். தற்போதைய மத்திய அரசு மத்திய விசாரணை அமைப்புகளை அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துவது குறித்து நிச்சயம் கேள்வி எழுப்புவோம்.

மூன்றாவதாக, அத்தியாவசியப் பொருட்களுக்கான விலையேற்றம் குறித்து கேள்வி எழுப்புவோம். விலையைக் குறைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக கூறுகிறது. ஆனால், விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே இருக்கிறது. அதோடு, சிறு குறு தொழில் நிறுவனங்கள் சந்திக்கும் பிரச்சினைகள், வேலை இழப்புகள் குறித்து எழுப்போம்" என்று கூறி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊழலுக்கு எதிராக பிரதமர் மோடி பேசியது 'ப்ளாக் காமெடி' முதல்வர் ஸ்டாலின் பதிலடி





**சென்னை , ஜூலை.20–**

**"ஊழல் வழக்குகளை எதிர்கொள்ளும் கட்சியினரை அருகருகே வைத்துக்கொண்டு, எதிர்க்கட்சிகள் மீது ஊழல் குற்றம்சாட்டி, ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருவதாகப் பிரதமர் பேசியது 'ப்ளாக் காமெடி' எனப்படும் வேடிக்கையான வேதனை" என்று முதல்வர் ஸ்டாலின் பதிலடி தரும் வகையில் கூறியுள்ளார்.**

இது தொடர்பாக திமுகவினருக்கு, அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில், "எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைப்பு குறித்த இரண்டாவது ஆலோசனைக் கூட்டம் ஜூலை 17, 18 ஆகிய தேதிகளில் நடைபெறும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, ஜூலை 17–ஆம் நாள் காலையில் நான் பெங்களூருக்குப் புறப்படும் நேரத்தில், கட்சியின் துணைப் பொதுச் செயலாளரும், உயர் கல்வித் துறை அமைச்சருமான பொன்முடியும், அவரது மகன் கவுதம சிகாமணி எம்பியையும் குறி வைத்து, அமலாக்கத் துறையை ஏவி, சோதனை நடத்தியது ஒன்றிய பாஜக அரசு.

திமுக இதுபோன்ற சோதனைகளை, மிரட்டல்களை, நெருக்கடிகளைக் கடந்து நெருப்பாற்றில் நீந்தி வந்த இயக்கம். அதனைக் கட்டிக்காத்த மறைந்த முதல்வர் கருணாநிதி எந்தவொரு சோதனையான காலகட்டத்தையும் எதிர்கொண்டு மீண்டு வரும் பேராற்றலை எங்களுக்குப் பயிற்றுவித்திருக்கிறார். பழிவாங்கும் போக்குடன் பச்சையாக அரசியல் செய்யும் பாஜக அரசின் இத்தகைய நடவடிக்கைகள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திமுகவுக்கும் அதன் தோழமைக் கட்சிகளுக்குமான வெற்றியை எளிதாக்கி வருகின்றன என ஊடகத்தினரிடம் தெரிவித்துவிட்டு பெங்களூரு புறப்பட்டேன்.

கடந்த ஜூன் 24–ம் நாள் பிஹார் தலைநகர் பாட்னாவில் திமுக உள்ளிட்ட 16 கட்சிகள் பங்கேற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்துக்குச் சில நாட்கள் முன்பாக திமுக அமைச்சர் செந்தில் பாலாஜி மீது அமலாக்கத் துறை ஏவப்பட்டதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். திமுக மீது மட்டுமின்றி, பாஜகவின் மதவாத – ஜனநாயக விரோத – எதேச்சாதிகாரத் தன்மையைக் கொள்கைப்பூர்வமாக எதிர்க்கின்ற கட்சியினர் மீது அமலாக்கத் துறை, வருமானவரித் துறை, சிபிஐ ஆகிய அமைப்புகளை ஏவிவிடுவதும், எதிர்க்கட்சி வரிசையில் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் பாஜகவுக்குத் தாவி வந்தால் அவர்களுக்குப் புனிதநீர் தெளித்து 'புண்ணியவான்'கள் ஆக்கிவிடுவதும் நாடறிந்த ரகசியம்தான். நாம் தனியாக எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

அமலாக்கத் துறையை அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் ஒன்றிய பாஜக அரசின் ஜனநாயக விரோதப் போக்கை தமிழகத்தில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தலைவர்கள் மட்டுமின்றி, அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால், ராஷ்ட்ரிய ஜனதா தளத் தலைவர் லாலு பிரசாத் உள்ளிட்டோரும் கண்டித்து அறிக்கை வெளியிட்டனர்.

ராகுல் காந்தி, இந்தியா என்ற கூட்டணியின் பெயரை முன்மொழியுமாறு மேற்கு வங்க முதல்வர் மமதா பானர்ஜியிடமும், வழிமொழியுமாறு உங்களில் ஒருவனும் தமிழகத்தின் முதல்வருமான என்னிடம் அன்புடன் கேட்டுக் கொண்டார். அதன்படியே கூட்டணிக்கு இந்தியா என்ற பெயர் சூட்டப்பட்டது.

எதிர்க்கட்சிகள் கூடுவது போட்டோ எடுக்கத்தான் என வெளியில் கேலி பேசிய பாஜக தலைமைக்கு உள்ளுக்குள் பயம் ஆட்டிப் படைத்தது. மத்திய பிரதேசத்தில் தனது கட்சி நிர்வாகிகளிடம் பிரதமர் நரேந்திர மோடி பேசியபோதும், அந்தமானில் பேசியபோதும் எதிர்க்கட்சிகளை, குறிப்பாக திமுகவைத் தேவையின்றி விமர்சித்துப் பேசினார். பெங்களூரு நகரில் எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைப்பு முன்கூட்டியே முடிவு செய்யப்பட்ட நிலையில், அவசர அவசரமாக பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கூட்டம் டெல்லியில் கூட்டப்பட்டது.

அதிமுகவின் ஒரு பிரிவுக்குப் பொறுப்பு வகிக்கும் பழனிசாமி உள்பட பல கட்சியினரும் விழுந்தடித்து ஓடி, தங்கள் விசுவாசத்தைக் காட்ட வேண்டிய நிர்பந்தத்துக்கு ஆளாகினர். அவர்களை விட்டால் இவர்களுக்கு ஆளில்லை. இவர்களை விட்டால் அவர்களுக்கு ஆளில்லை. இருதரப்புக்கும் மக்களிடம் செல்வாக்கு இல்லை என்பதுதான் உண்மையான நிலைமை. ஊழல் வழக்குகளை எதிர்கொள்ளும் கட்சியினரை அருகருகே வைத்துக்கொண்டு, எதிர்க்கட்சிகள் மீது ஊழல் குற்றம்சாட்டி, ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருவதாகப் பிரதமர் பேசியது 'ப்ளாக் காமெடி' எனப்படும் வேடிக்கையான வேதனை.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சியிலிருந்து பாஜகவுக்கும் – அதனுடன் கூட்டு சேர்ந்து நாட்டின் ஒருமைப்பாட்டைச் சிதைப்பவர்களுக்கும் 'விசா' வழங்கி வெளியே அனுப்பிட மக்கள் ஆயத்தமாகி விட்டார்கள். அதனை மறைக்கத்தான் அமலாக்கத்துறை தொடங்கி அத்தனை அமைப்புகளையும் ஏவி அச்சுறுத்தும் வேலைகள் நடக்கின்றன. 'இந்தியா'வில் உள்ள யாரும் இத்தகைய மிரட்டல்களுக்கு அஞ்சப் போவதில்லை. உண்மையான இந்தியாவின் எதிரிகள் யார் என்பதை அடையாளம் காட்ட வேண்டியதே நமது முதன்மையான பணி" என்று முதல்வர் ஸ்டாலின் அந்த கடிதத்தில் கூறியுள்ளார்.



புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரியில், முதலாவது மருத்துவப் பட்டப்படிப்பு முடித்த மாணவ, மாணவிகளுக்கு, சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சுற்றுச்சூழல் அமைச்சர் சிவ.வி.மெய்யநாதன் ஆகியோர் சான்றிதழ்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா, இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை செல்வவிநாயகம், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் பார்த்தசாரதி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், கே.பள்ளிவாசலில், நபார்டு திட்டத்தின்கீழ், ரூ.34.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள, கால்நடை மருந்தக புதிய கட்டடத்தினை, சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று திறந்து வைத்து, கால்நடை மருந்துகளை பார்வையிட்டார். உடன் கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர் (பொ) மரு.எஸ்.ராமச்சந்திரன், ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.அழகு (எ) சிதம்பரம், உதவி இயக்குநர்கள் மரு. வெங்கடேசன், மரு.பாபு, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

புதுகை வரலாறு சுட்டிக்காட்டல் எதிரொலி

# கூடுதல் விலைக்கு மது விற்றால் சஸ்பெண்ட் டாஸ்மாக் கடைகளுக்கு நிர்வாகம் எச்சரிக்கை




சென்னை , ஜூலை.20–

மதுபானக் கடைகளில் மதுபானங்களுக்கு நிர்ணயித்த விலையை விட கூடுதலாக ரூ.10 அல்லது அதற்கு மேல் வசூலித்தால் சஸ்பெண்ட் நடவடிக்கை பாயும் என்று டாஸ்மாக் நிர்வாகம் எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாகடாஸ்மாக் மாவட்ட மேலாளர்களுக்கு, டாஸ்மாக் நிர்வாக இயக்குநர் அனுப்பிய சுற்றறிக்கையில், "மதுக்கடைகளில் மதுபானங்களை நிர்ணயித்த விலையைவிட கூடுதலாக 10 ரூபாய் அல்லது அதற்கும் மேல் வசூலித்து விற்பனை செய்தால் கடை ஊழியர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொண்டு தற்காலிக பணி நீக்கம் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதில், ஏதேனும் விதி மீறல்கள் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட மாவட்ட மேலாளர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாஸ்மாக் மதுபானக் கடைகளில் பிராந்தி, விஸ்கி, ஒயின், பீர், கூலிங் பீர் என ஒவ்வொரு விதமான மது பாட்டில்களுக்கும் கூடுதலாக ஒரு குறிப்பிட்டத் தொகை வசூலிக்கப்படுவதாக மது அருந்துபவர்கள் தொடர்ந்து புகார் அளித்து வந்தனர். மதுவிலக்கு துறைக்கு முத்துசாமி அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர் மதுபானங்களை கூடுதல் விலைக்கு உத்தரவிடக் கூடாது என உத்தரவிட்டார். ஆனாலும் மதுபான விலையைவிட கூடுதலாக வசூலிப்பதாக ஆங்காங்கே புகார்கள் எழுந்ததால் தற்போது டாஸ்மாக் மாவட்ட மேலாளர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, ரூ.10 கூடுதலாக வாங்குவது குறித்து டாஸ்மாக் விற்பனையாளர்கள், கண்காணிப்பாளர்களிடம் கேட்டபோது தங்கள் பெயர்களை குறிப்பிடக் கூடாது என்று கூறி, அவர்கள் அளித்த தகவல்கள்: "வாடகை ஒப்பந்தத்தை விட கூடுதல் வாடகை தர வேண்டும். அதாவது நாள் ஒன்றுக்கு ரூ.400 முதல் அதிகபட்சம் ரூ, 1,000 வரை கொடுக்க வேண்டும். வாட்ச்மேனுக்கு மாதம் குறைந்தபட்சம் ரூ.6 ஆயிரமேனும் கொடுக்க வேண்டும். பெட்டி இறக்குவதற்கு கூலியாக பெட்டி 1–க்கு ரூ.5 மாமூல் ரூ.100 தர வேண்டும். அதில் கெடுபிடி செய்தால் 'பாட்டில் டேமேஜ்' கூடும்.

கடைகளுக்கு சரக்கு அனுப்புபவர் பில் போட மாமூல் ரூ.500 முதல் ரூ.5,000 வரை கொடுக்க வேண்டும். ஆடிட்டிங் செய்யும் ஆடிட்டர்களுக்கு ஒரு கடைக்கு மாதம் ரூ.1,200 கொடுக்க வேண்டும். கூடுதல் கலால் அலுவலருக்கு மாதம் ரூ.1,200, மாவட்ட கலால் அலுவலருக்கு மாதம் ரூ.700, டாஸ்மாக் மாவட்ட மேலாளருக்கு விற்பனையில் 3.5 சதவீதம் கமிஷன் கொடுக்க வேண்டும்.

இது தவிர காவல்துறையில் பகல் பீட்டுக்கு ரூ.300 மற்றும் குவாட்டர், இரவு பீட்டுக்கு ரூ.200 மற்றும் குவாட்டர்; இது இல்லாமல் அரசியல் கட்சிகள், கோயில் திருவிழா நன்கொடைகள் இருக்கின்றன. இந்தச் செலவையெல்லாம் ஈடுகட்டவே குடிமகன்களிடம் ஒரு பாட்டிலுக்கு கூடுதலாக ரூ. 10 வாங்குகிறோம். இப்படி வாங்காவிட்டால் மேற்கண்ட செலவினங்களை எங்களால் சமாளிக்கவே முடியாது" என்று கூறியது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் தான் புதுகை வரலாறு கடந்த 3 வருடமாக மது பாட்டிலுக்கு கூடுதல் தொகை வசூல் செய்வதை நேற்று வரையில் சுட்டிக்காட்டி வந்ததையடுத்து டாஸ்மாக் நிர்வாகம் தற்போது சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

# குண்டர் சட்ட உத்தரவில் கையெழுத்திடும் அதிகாரத்தை ஐஜிக்களுக்கு வழங்க வேண்டியதில்லை: தமிழக அரசு தகவல்



மதுரை, ஜூலை.20–

குண்டர் சட்ட உத்தரவில் கையெழுத்திடும் அதிகாரத்தை ஐஜிக்களுக்கு வழங்க தேவையில்லை. அந்த அதிகாரம் மாவட்ட ஆட்சியர்களிடமே இருக்கலாம் என்று உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

திண்டுக்கல்லைச் சேர்ந்த நாகராஜ், தன் மகன் தமிழழகன் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டதை ரத்து செய்யக் கோரி உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது, மாவட்ட ஆட்சியர்களுக்கு பணிச்சுமை அதிகமாக இருப்பதால், குண்டர் சட்ட உத்தரவுகளில் மாநகர் காவல் ஆணையர் மற்றும் ஐஜி ஆகியோர் கையெழுத்திடும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளவும், அது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்யவும் உயர் நீதிமன்றம் ஜூன் 19–ல் உத்தரவிட்டது.

இந்த வழக்கு நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், எம். நிர்மல்குமார் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், "தமிழகத்தில் 38 மாவட்டங்கள் உள்ளன. காவல் துறையில் வடக்கு, மேற்கு, மத்தி மற்றும் தெற்கு என 4 மண்டலங்கள் உள்ளன. இந்த மண்டலங்களை ஐஜிக்கள் நிர்வகிக்கின்றனர். ஒவ்வொரு ஐஜிக்கள் கட்டுப்பாட்டில் 10 மாவட்டங்கள் உள்ளன. தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மாவட்டங்களில் காவல் கண்காணிப்பாளர்களின் பணியை மேற்பார்வை செய்வது, அந்த மாவட்டங்களில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு மற்றும் பிற பணிகளில் ஐஜி கவனம் செலுத்த வேண்டியதுள்ளது.

குண்டர் சட்ட உத்தரவுகளில் மாவட்ட ஆட்சியர் கையெழுத்திடுகிறார். இந்த நடைமுறை சீராக உள்ளது. இந்த நடைமுறை தொடர்வதே சரியானதாக இருக்கும். மாவட்ட ஆட்சியர்கள் குண்டர் சட்ட உத்தரவு பிறப்பிப்பதே சரியானதாக இருக்கும். இந்த அதிகாரத்தை ஐஜிக்களுக்கு வழங்க வேண்டியதில்லை. அதிகாரப் பகிர்வு தன்னிச்சையாக, தவறாக குண்டர் சட்டத்தை பயன்படுத்துவதை தடுக்கும். எனவே, சட்டத் திருத்தம் தேவையில்லை என அரசு கருதுகிறது" என்று அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இதை ஏற்று வழக்கை முடித்து வைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# இன்று

**20-7-2023**

மலைவேம்பு இலை அரைத்து பூசினால் பேன் தொல்லை தீரும்
சக வருடம் 1945 ஆஷாடம் 29

| | | | |
|---|---|---|---|
| சோபகிருது ஆடி 4 | JUL - THU வியாழன் | முஹர்ரம் 1 | இராசிபலன் |
| | | வளர்பிறை 201 / 164 | |

வளர். திரிதியை 60.00 (முழுவதும்) ஆயில்யம் 12.50 (கா. 11.09) தியாஜ் 46.03 அகஸ் 31.17 சித்த 12.50 மேல் மரண. திரிதினஸ்பிரிக். சுவாமிமலை ஸ்ரீமுருகப்பெருமான் தங்கக் கவசம் அணிந்து வைரவேல் தரிசனம். மதுரை மீனாட்சி முளைக்கொட்டு உற்சவாரம்பம்.

| | நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 10.45-11.45 | 12.15-1.15 | 01.30 | 09.00 | 06.00 |
| மாலை | ---------- | 6.30-7.30 | 03.00 | 10.30 | 07.30 |

சூலம் : தெற்கு; பரிகாரம் : தைலம்; கடக லக்னம் இருப்பு நா. 4 வி. 49; சந்திராஷ்டமம் உத்திராடம் திருவோணம்
கரணம் : 3-4.30; சூரிய உதயம் : 6.01
தன் வினை தன்னை சுடும்

இராசிபலன்: மேஷம் - நற்செயல்; ரிஷபம் - வெற்றி; மிதுனம் - பக்தி; கடகம் - ஓய்வு; சிம்மம் - சினம்; கன்னி - பாசம்; துலாம் - முயற்சி; விருச்சி - விருத்தி; தனுசு - பணிவு; மகரம் - களிப்பு; கும்பம் - தெளிவு; மீனம் - சிந்தனை

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

தீக்குச்சி தீப்பெட்டியிடம் கேட்டது, நீயும் நானும் ஒவ்வொரு முறை உரசும்போதும் நானே பற்றி எரிகிறேன், நீ எரிவதில்லையே ஏன்?

தீப்பெட்டி சொன்னது...தலைக்கனம் உள்ளவர்கள் விரைவில் அழிந்துபோவார்கள்






# காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு மாநில அளவில் நடைபெற்ற தடகளப் போட்டியில் தென்காசி பள்ளிமாணவன் சாதனை



தென்காசி, ஜூலை.20-

காமராஜர் 121வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு வி.டி.ஏ.ஏ மற்றும் ரயோலா பள்ளி இணைந்து நடத்திய மாநில அளவிலான தடகள போட்டி சிவகாசி அருகே உள்ள திருத்தங்கல் பகுதியில் செயல்பட்டு வரும் ரயோலா பள்ளியில் வைத்து நடைபெற்றது.

இந்த போட்டியில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த மாணவ,மாணவிகள் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்திய நிலையில் தென்காசி மாவட்டம் இலஞ்சி பகுதியில் உள்ள பாரத் வித்யா மந்திர் சி பி எஸ் சி தனியார் பள்ளியில் 11ஆம் வகுப்பு பயின்று வரும் சங்கரன் கோவிலை சேர்ந்த மனோகர் என்பவரது மகன் அருண் சந்தோஷ் என்ற மாணவன் இந்த போட்டியில் கலந்து கொண்டு நீளம் தாண்டுதல் போட்டியில் 2-வது இடமும்,200 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் 26.4 செகண்டில் முதல் இடத்தை பிடித்து தங்க பதக்கத்தினை வென்றார்.

மாநில அளவில் நடைபெற்ற இந்த போட்டியில் தென்காசி மாவட்டத்தை சேர்ந்த மாணவன் முதல் பரிசை வென்ற நிலையில் மாணவன் அருண் சந்தோஷை தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் துரை. ரவிச்சந்திரன் நேரில் வரவழைத்து பாராட்டுகளை தெரிவித்தார், தொடர்ந்து அருண் சந்தோஷ் மற்றும் அவரது தந்தை மனோகரனுடன் மாவட்ட ஆட்சியரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து புகைப்படம் எடுத்து கொண்டார்.

# உக்ரைன் மீதான போர்ரஷிய அதிபர் புதின் உத்தரவுக்கு ராணுவம் அடிபணிய மறுப்பு?



மாஸ்கோ, ஜூலை,20

உக்ரைன் மீது ரஷியா தொடங்கிய போர் 1½ ஆண்டுகளாக நீடித்து வருகிறது. உக்ரைனின் சில நகரங்களை ரஷிய படைகள் கைப்பற்றின. இப்போரில் ரஷிய ராணுவ வீரர்கள் ஏராளமானோர் பலியாகி உள்ளதாக அமெரிக்கா, உக்ரைன் தெரிவித்துள்ளன. உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ஆயுத உதவிகளை செய்து வருகின்றன. இதனால் ரஷிய படைகளுக்கு எதிராக உக்ரைன் ராணுவம் தொடர்ந்து போரிட்டு வருகிறது. இந்த நிலையில் ரஷிய அதிபர் விளாடிமிர் புதினின் உத்தரவுகளுக்கு ரஷிய ராணுவம் அடிபணிய மறுப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

இது தொடர்பாக போர் ஆய்வுக்கான நிறுவனம் ஒன்று கூறியதாவது:- உக்ரைன் போருக்கு மத்தியில் ரஷிய அதிபர் புதினுக்கு ராணுவ தளபதிகளால் காட்டப்படும் கீழ்ப்படியாமை தற்போது ராணுவ வீரர்களிடமும் பரவி வருகிறது. உக்ரைன் மீது போரை தொடங்கியதில் இருந்து, பலனற்ற கட்டமைப்புகள், குழுக்களில் நம்பிக்கையின்மை அல்லது வெளிப்படைத்தன்மை, துருப்புகளின் குறைந்த மன உறுதி ஆகியவற்றுடன் ரஷிய படைகள் போராடின. 58-வது ஒருங்கிணைந்த ஆயுத ராணுவ தளபதி கர்னல் ஜெனரல் இவான் போபோவ் பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கு ரஷிய ராணுவத்தில் எதிர்ப்பு கிளம்பியது.

இதே போல் பல ராணுவ தளபதிகள் மோதல் போக்குடன் உள்ளனர். கர்னல் ஜெனரல் மைக்கேல் டெப்லின்ஸ்கியை கைது செய்தால், கைப்பற்றப்பட்ட கெர்சன் பிராந்தியத்தில் இருந்து வெளியேறுவோம் என்று ரஷிய ராணுவத்தின் ஒரு பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இது தளபதிகள் மத்தியில் உள்ள கீழ்ப்படியாமை அவர்களின் சில வீரர்களுக்கு எவ்வாறு பரவுகிறது என்பதை காட்டுகிறது. ராணுவ தளபதிகள் மத்தியில் கீழ்ப்படியாமை அதிகரித்து வருவது ரஷிய ராணுவ தலைமையை இன்னும் வெளிப்படையாக எதிர்க்க மற்ற உயர்மட்ட அதிகாரிகளை ஊக்குவிக்கும் என்று கூறியுள்ளது. ஏற்கனவே உக்ரைன் போரில் ரஷிய படைகளுக்கு உதவிய தனியார் ராணுவ அமைப்பான வாக்னர் குழு ரஷிய அரசுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட முயன்றது. பின்னர் பெலாரஸ் அதிபரின் சமரசத்தால் கிளர்ச்சியை கைவிட்டது. இதன் மூலம் புதினுக்கு ஏற்பட்ட நெருக்கடி விலகியது. இந்த நிலையில் புதினின் உத்தரவுக்கு ரஷிய ராணுவ வீரர்கள் அடி பணிய மறுப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.






# காரைக்காலில் காமராஜரின் 121 வது பிறந்த தின விழா கொண்டாட்டம்



**காரைக்கால் , ஜுலை,20**

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும் முன்னாள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர்மான மறைந்த காமராஜரின் 121 வது பிறந்த தினம் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. காங்கிரஸ் கட்சி சார்பில் முன்னாள் மாநிலத் தலைவர் ஏ.வி. சுப்பிரமணியன், மாவட்ட தலைவர் சந்திரமோகன் தலைமையில் அரசு பள்ளி மாணவர்களுக்கு நோட்டு பேனா உள்ளிட்ட எழுதுபவர்கள் வழங்கப்பட்டது.

காரைக்கால் மேடு மீனவ கிராமத்தில் உள்ள பக்கிரிசாமி பிள்ளை அரசு உயர்நிலைப் பள்ளியில் காங்கிரஸ் கட்சியின் மீனவர் அணி சார்பில் 1000க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் மற்றும் எழுதுபொருட்களை வழங்கினார். எல்கேஜி மற்றும் யுகேஜி மாணவர்களுக்கு எழுது பொருட்களுடன் பந்து வழங்கப்பட்டது.

முன்னதாக பள்ளியில் வைக்கப்பட்டிருந்த காமராசரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் மாநிலத் துணைத் தலைவர் பஷீர் மாநில செயலாளர் மோகனவேல்மாவட்ட மீனவர் அணி தலைவர் அஞ்சப்பன்மாவட்ட மகளிர் அணி தலைவி நிர்மலா மாவட்ட இளைஞரணி தலைவர் ரஞ்சித் மாநில இளைஞரணி செயலாளர் சமீர் வடக்கு வட்டார காங்கிரஸ் தலைவர்கள் சுப்பையன், அரசன் மற்றும பள்ளி ஆசிரியர்கள் ஏராளமான காங்கிரஸ் கட்சியினர் கலந்து கொண்டனர்.

# கீரமங்கலம் அருகே நார் இயந்திரத்தில் சிக்கி வட மாநில கூலிதொழிலாளி பலி



ஆலங்குடி, ஜீலை.20-

கீரமங்கலம் அருகே தென்னை மட்டையில் இருந்து நார் பிரிக்கும் இயந்திரத்தில் சிக்கி ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி இளைஞர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம் அருகே உள்ள செரியலூர் கரம்பக்காடு பகுதியில் ரவி என்பவருக்குச் சொந்தமான கயிறு ஆலை மற்றும் தென்னை மட்டையில் இருந்து நார் பிரித்தெடுக்கும் ஆலை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த ஆலையில் 35 வட மாநிலத் தொழிலாளர்கள் உட்பட 100க்கும் மேற்பட்டோர் பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையில் பணியில் ஈடுபட்டிருந்த ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த பெரோஸ் கடாட் (32) என்ற இளைஞர் தென்னை மட்டையில் இருந்து நார் பிரித்தெடுக்கும் இயந்திரத்தில் பணியில் ஈடுபட்டிருந்த போது எதிர்பாரதவிதமாக சிக்கியதாக கூறப்படுகிறது.

இரவு நேரத்தில் பணியில் இருந்த சக ஊழியர்கள் அனைவரும் காதில் ப்ளூடூத் இயந்திரத்தின் மூலம் பாடல்களைக் கேட்டுக் கொண்டு பணியில் இருந்ததாகவும் அதனால் அவர் இயந்திரத்தில் மாட்டியது யாருக்கும் கேட்கவில்லை எனவும் கூறப்படுகிறது. இயந்திரத்தில் மாட்டிய பெரோஸ் கை துண்டாகியதோடு கழுத்திலும் காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சிறிது நேரம் கழித்து பணியில் இருந்த சக ஊழியர்கள் பார்த்த போது பெரோஸ் இயந்திரத்திலேயே உயிரிழந்த நிலையில் கிடந்துள்ளார்.

இதனையடுத்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த கீரமங்கலம் போலீசார் பெரோஸின் உடலை மீட்டு அறந்தாங்கி அரசுத் தலைமை மருத்துவமனைக்கு உடற்கூறாய்வுக்காக அனுப்பி வைத்தனர். மேலும், இதுகுறித்து கீரமங்கலம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# குஜராத்தில் கனமழை வெள்ளத்தில் மிதக்கும் வாகனங்களால் பொதுமக்கள் கடும் அவதி



காந்திநகர், ஜூலை,20

குஜராத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக சாலையில் நிறுத்தப்பட்டிருந்த கார் உள்ளிட்ட வாகனங்கள் வெள்ளத்தில் மிதக்கும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

குஜராத்தில் செவ்வாய்கிழமை பெய்த கனமழை காரணமாக ராஜ்கோட், சூரத், கிர் சோம்நாத் மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இந்த 3 மாவட்டங்களிலும் சராசரியாக 300 மில்லி மீட்டர் மழை செவ்வாய்கிழமை பதிவாகி இருக்கிறது. குறிப்பாக, கிர் சோம்நாத் மாவட்டத்தில் உள்ள சூரத்பாத நகரில் செவ்வாய்கிழமை காலை 6 மணி முதல் 14 மணி நேரத்தில் 345 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளதாகவும், ராஜ்கோட் மாவட்டத்தில் உள்ள தொராஜி தாலுகாவில் 14 மணி நேரத்தில் 145 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளதாகவும் மாநில அவசரகால செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. இதேபோல், ஜீலை-18ம் தேதி ஒரே நாளில் சூரத்தில் 104 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

குஜராத்தில் மொத்தமுள்ள 206 நீர்த்தேக்கங்களில் 43 நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிகின்றன. 18 நீர்த்தேக்கங்களுக்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது மேலும் 19 நீர்த்தேக்கங்களுக்கு மாநில அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படை ஆகியவை உஷார்படுத்தப்பட்டுள்ளன. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளைச் சேர்ந்த 70 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ராஜ்கோட் மாவட்டத்தின் தொராஜி நகரில் மழைநீர் வெளியேறாமல் சாலையில் தேங்கி நிற்பதால் கார் உள்ளிட்ட ஏராளமான வாகனங்கள் வெள்ள நீரில் மிதக்கும் வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி வருகின்றன.

ஏராளமான வீடுகளுக்குள்ளும் கடை உள்ளிட்ட வர்த்தக நிறுவன கட்டிடங்களுக்குள்ளும் மழை நீர் புகுந்துள்ளதால் சூரத்பாத நகரில் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ராஜ்கோட் மற்றும் சூரத் மாவட்டங்களின் பல பகுதிகளிலும் மழை நீர் காரணமாக மக்கள் மிகுந்த சிரமங்களைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

# பெரியபாளையம் அருகே அனுமதியின்றி சவுடு மண் ஏற்றி வந்த 2 லாரிகள் பறிமுதல்

## தப்பி ஓடிய லாரி டிரைவர்களுக்கு போலீசார் வலை வீச்சு



ஊத்துக்கோட்டை, ஜூலை20-

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியம், மெய்யூர் ஊராட்சியில் உள்ள வேம்பேடு பகுதியில் இருந்து அனுமதியின்றி லாரிகளில் சவுடு மண் ஏற்றி வருவதாக திருவள்ளூர் துணை தாசில்தார் சண்முகசுந்தரத்திற்கு நேற்று ரகசிய தகவல் கிடைத்தது. எனவே, அவரது முன்னிலையில் பெரியபாளையம் போலீசார் மற்றும் கனிமவளத்துறை அதிகாரிகள் பெரியபாளையத்தில் உள்ள வடமதுரை கூட்டுச் சாலையில் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாக சவுடு மண் ஏற்றி வந்த 2 லாரிகளை போலீசார் தடுத்து நிறுத்தி சோதனை செய்ய முற்பட்டனர்.இதனால் அந்த லாரிகளை ஓட்டி வந்த டிரைவர்கள் நடுரோட்டில் அந்த லாரிகளை நிறுத்தி விட்டு தப்பி ஓடிவிட்டனர். எனவே,அந்த லாரிகளை போலீசார் சோதனை செய்தபோது வேம்பேடு பகுதியில் இருந்து அனுமதி இன்றி சவுடு மண் ஏற்றி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் அந்த 2 லாரிகளையும் போலீசார் பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்தனர். திருவள்ளூர் தாசில்தார் சண்முகசுந்தரம் கொடுத்த புகாரின் பேரில் பெரியபாளையம் போலீசார் வழக்கு பதிவு செய்து தப்பி ஓடிய லாரி டிரைவர்களை வலை வீசி தேடி வருகின்றனர். இச்சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சென்னை போக்குவரத்து காவல் துறையினர், ஆட்டோ ஓட்டுநர்களுக்கு அறிவுரை



சென்னை, ஜூலை,20

சென்னை, புரசைவாக்கத்தில் உள்ள தனியார் ஹோட்டலில் வேப்பேரி, புரசைவாக்கம் பகுதியில் ஆட்டோ ஓட்டும் 150 ஓட்டுனர்களுக்கு வேப்பேரி போக்குவரத்து காவல்துறையின் சார்பாக விழிப்புணர்வு மற்றும் கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்பட்டது.

ஆட்டோவை போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தக்கூடாது. ஓட்டுநர் உரிமம், காப்பீடு, யூனிஃபார்ம், இல்லாமல் வாகனத்தை இயக்கக் கூடாது.

மது அருந்தி வாகனம் ஓட்டக்கூடாது. அதிக அளவில் பயணிகளை ஏற்ற கூடாது. செல்லும் வழியில் விபத்துக்கள் ஏதும் ஏற்பட்டால் உயிர் காக்க கோல்டன் ஹவரில் உதவி செய்து உயிர் காக்க உதவ வேண்டும்.

பொது மக்களிடம், பயணிகளிடம் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என அறிவுரைகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் வேப்பேரி போக்குவரத்து உதவி ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர்.

### மாவட்ட ஆட்சியர் தலைமையில்

# சீர்காழியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பங்களை ஆன்லைனில் பதிவு செய்வதற்கான பயிற்சி முகாம்

சீர்காழி, ஜூலை, 20

தமிழ்நாடு அரசு வருகின்ற செப்டம்பர் 15-ம் தேதி பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு குடும்ப தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.1,000 வழங்க உள்ளது.

இந்த உரிமைத் தொகையை பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஜூலை 20-ம் தேதி முதல் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பங்களை பெற்று அதனை ஆன்லைன் மூலம் பதிவேற்றம் செய்வது குறித்து தன்னார்வலர்களுக்கான பயிற்சி முகாம் மாவட்ட ஆட்சியர் மகாபாரதி தலைமையில் நடைபெற்றது.

சீர்காழி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமில் கலைஞர் உரிமைத்தொகை பெறுவதற்கான விண்ணப்பங்களை பதிவு செய்யும் முறை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் பயோமெட்ரிக் கருவியின் மூலம் கைரேகை பதிவு செய்வது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த பயிற்சி முகாமில் மகளிர் சுய உதவி குழு, இல்லம் தேடி கல்வி திட்டம் மற்றும் தன்னார்வ பெண்கள் சுமார் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். முகாமில் சீர்காழி வட்டாட்சியர் செந்தில்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் சரவணன் பி ஆர் ஓ ரவிச்சந்திரன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# டாஸ்மாக் கொள்முதல் குறித்த ஆர்டிஐ கேள்விகளுக்கு எப்படி விலக்கு கோர முடியும்? – உயர் நீதிமன்றம் கேள்வி

சென்னை, ஜூலை,20

“டாஸ்மாக் நிறுவனத்துக்கு எந்தெந்த நிறுவனங்களிடம் இருந்து, எவ்வளவு விலைக்கு மதுபானங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன என்ற விவரங்களைத் தெரிவிக்க தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் எப்படி விலக்கு கோர முடியும்?” என்று சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

கோவையைச் சேர்ந்த வழக்கறிஞர் லோகநாதன் என்பவர், டாஸ்மாக்கில் மதுபானம் விற்பனை செய்ததன் மூலம் அரசுக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு, ஊழியர்களுக்கான சம்பளத் தொகை விவரங்கள், கடை வாடகை உள்ளிட்ட செலவுகள் விவரங்கள், மது உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து எவ்வளவு மதுபானங்கள், என்ன விலைக்கு கொள்முதல் செய்யப்படுகின்றன என்பது உள்ளிட்ட விரங்களைக் கேட்டு, தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ், கடந்த 2015ம் ஆண்டு விண்ணப்பித்திருந்தார்.

மதுபான விற்பனை மூலம் கிடைத்த வருமானம், ஊழியர் சம்பளம் உள்ளிட்ட செலவுகள் குறித்த விவரங்களை வழங்கிய டாஸ்மாக் நிர்வாகம், மூன்றாம் நபரின் வர்த்தகம் சம்பந்தப்பட்ட விவரங்களை வெளியிட முடியாது எனக் கூறி, எந்தெந்த நிறுவனங்களிடம், எவ்வளவு விலைக்கு மதுபானங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன என்ற விவரங்களை வழங்க மறுத்து விட்டது.

இதை எதிர்த்து லோகநாதன், கடந்த 2017-ம் ஆண்டு தாக்கல் செய்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், எந்தெந்த மது உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து, என்ன விலைக்கு மதுபானங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன? என்ற விவரங்களை தெரிவிக்க உத்தரவிட்டிருந்தது. இதை எதிர்த்து டாஸ்மாக் நிறுவனம் தாக்கல் செய்த மேல் முறையீட்டு வழக்கு தலைமை நீதிபதி கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, டாஸ்மாக் தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன், "மூன்றாவது தரப்பின் வர்த்தகம் பாதிக்கப்படும் என்பதால் தகவல் உரிமைச் சட்டப்பிரிவின்படி இந்த தகவல்களை வழங்க முடியாது. இந்த தகவல்கள், தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் விலக்கு பெற்றவை" என்று வாதிட்டார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், "தமிழகத்தில் டாஸ்மாக் நிறுவனம் மட்டுமே மதுபான விற்பனையில் ஈடுபடுகிறது. மதுபானம் கொள்முதல் செய்ய எந்த டெண்டரும் கோரப்படுவதில்லை. நேரடியாக உற்பத்தி நிறுவனங்களில் இருந்து மதுபானங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. இந்தச் சூழலில் எப்படி வர்த்தகம் பாதிக்கப்படுகிறது?” என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

மேலும், “எந்த அடிப்படையில் தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்தத் தகவல்கள் விலக்கு பெற்றவை?” என கேள்வி எழுப்பிய நீதிபதிகள், இது குறித்து விளக்கமளிக்க உத்தரவிட்டு, விசாரணையை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைத்தனர்.

# பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் அதிபர் புதின் பங்கேற்க மாட்டார் – தென் ஆப்பிரிக்கா அதிபர் அறிவிப்பு



**கேப்டவுன் , ஜூலை 20–**

பிரேசில், ரஷியா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய 5 நாடுகள் பங்கேற்கும் பிரிக்ஸ் நாடுகளின் 15–வது உச்சி மாநாட்டை நடத்துவதற்குத் தென் ஆப்பிரிக்கா தயாராக உள்ளது என அதிபர் சிரில் ராமபோசா உறுதிப்படுத்தினார்.

இதன்படி அடுத்த மாதம் பிரிக்ஸ் நாடுகளின் 15–வது உச்சி மாநாடு நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்று நெருக்கடி மற்றும் அதனைத் தொடர்ந்து சர்வதேச கட்டுப்பாடுகள் ஆகியவற்றுக்குப் பின் முதல் முறையாக பல்வேறு நாடுகளின் தலைவர்கள் நேரடியாகப் பங்கேற்கக் கூடிய முதல் உச்சி மாநாடாக அது அமையும். உக்ரைனுக்கு எதிரான ரஷியாவின் படையெடுப்பு தீவிரமடைந்து உள்ள சூழலில், போரைக் கைவிட உலக நாடுகள் வலியுறுத்தின.

சர்வதேச அமைப்புகளும் கோரிக்கை விடுத்தன. ஆனால், அதனை இரு நாடுகளும் கேட்கவில்லை. போர் நீடித்து வருகிறது. உக்ரைன் மீது போர் தொடுத்த புதினை கைது செய்யச் சர்வதேச குற்ற நீதிமன்றம் சார்பில் வாரண்ட் பிறப்பிக்கப்பட்ட நிலையில், அதில், தென் ஆப்பிரிக்காவும் ஓர் உறுப்பினராக உள்ளது.

அதனால், புதின் அந்நாட்டில் இருக்கும்போது, அவரை கைது செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளது. இந்நிலையில், பிரிக்ஸ் நாடுகளின் உச்சி மாநாட்டில் ரஷிய அதிபர் புதின் பங்கேற்க மாட்டார் என தென் ஆப்பிரிக்க அதிபர் சிரில் ராமபோசா அறிவித்துள்ளார். ரஷிய கூட்டமைப்பு சார்பில் ரஷிய வெளியுறவு மந்திரி செர்கே லாவ்ரவ் பங்கேற்பார் என ரஷிய அதிபரின் செய்தி அறிக்கை தெரிவிக்கின்றது.

# காணாமல் போன பள்ளி மாணவன் சடலமாக மீட்பு



மேல்மருவத்தூர், ஜூலை. 20–

செங்கல்பட்டு மாவட்டம், மேல்மருவத்தூர் அருகே உள்ள சோத்துப்பாக்கம் அரசினர் நடுநிலை பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்த பள்ளி மாணவன் சஞ்சய் வயது(13) இவர் கடந்த 15 ஆம் தேதி பள்ளியில் இருந்து வயிற்று வலி காரணமாக வீட்டுக்கு செல்வதாக ஆசிரியரிடம் கூறிவிட்டு சென்றவர் மாயமானார்.

இது தொடர்பாக பெற்றோர்கள் மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் மகன் காணவில்லை என புகார் அளித்திருந்த நிலையில் 5 நாட்களுக்குப் பிறகு சோத்துப் பாக்கத்தில் உள்ள பாழடைந்த கிணற்றில் சடலமாக கிடந்தார்.

இதனை மேல்மருவத்தூர் காவல்துறையினர் சடலத்தை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



இந்து முன்னணியின் மாநிலம் தழுவிய கொள்கை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம் சீர்காழி பழைய பேருந்து நிலையம் அருகில் இந்து முன்னணி மாவட்ட தலைவர் சரண்ராஜ் வழிகாட்டலின் படி இந்து முன்னணி நகரத் தலைவர் நாகமுத்து தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் திரு சண்முகம் முன்னிலையில் நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் சிறப்பு பேச்சாளராக அழகிரிசாமி சிறப்புரை ஆற்றினார். செந்தில்குமார் வி.எச்.பி மண்டல செயலாளர் மற்றும் இந்து முன்னணி நகர ஒன்றிய பொறுப்பாளர் மற்றும் கிராம கோவில் பூசாரி பேரவையை மாவட்ட அமைப்பாளர் சுந்தரமூர்த்தி கலந்து கொண்டனர். இதில் சமூக ஆர்வலர் சம்பத் நன்றியுரை கூறினார்

# கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தில் 5 சாலைகள் அமைக்கும் பணிக்கு பூமி பூஜை

## ஒன்றிய செயலாளர் கி.வே ஆனந்தகுமார் பங்கேற்பு



ஊத்துக்கோட்டை, ஜூலை 20–

முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாடு திட்டத்தில் கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தில் 5 சாலைகள் அமைக்கும் பணிக்கு நேற்று பூமி பூஜை நிகழ்ச்சி நடைபெற்றது.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாடு திட்டத்தில் ரூ.49லட்சம் மதிப்பில் கவரப்பேட்டை தெலுங்கு காலனி சாலையும், ரூ.37லட்சம் மதிப்பில் கவரப்பேட்டை ரயில்வே ஸ்டேஷன் சாலையும், ரூ.43லட்சம் மதிப்பில் பெருவாயல் ஊராட்சி நயினாங்குப்பம் சாலையும், ரூ.1கோடியே 8 லட்சம் மதிப்பில் மங்காவரம் முதல் அப்பாவரம் வரையிலான சாலையும், ரூ.34லட்சம் மதிப்பில் பன்பாக்கம் காலனி சாலையையும் அமைக்க திட்டமிடப்பட்டது.

இந்நிலையில், இந்த சாலைகள் அமைப்பதற்கான பூமி பூஜை நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதற்கு கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் கி.வே. ஆனந்தகுமார் தலைமை தாங்கி அந்தந்த பகுதிகளில் பணியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகளில், ஒன்றிய துணை செயலாளர் கே.இ.திருமலை, ஒன்றிய கவுன்சிலர்கள் ஜோதி, அமலா சரவணன், ஜெயந்தி கெஜா, திமுக மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் முத்துகுமரன், வட்டார வளர்ச்சி அலுவலக ஒன்றிய பொறியாளர்கள் மணிமேகலை, செல்வராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்த 5 சாலைகளில் மங்காவரம் முதல் அப்பாவரம் வரை போடப்பட உள்ள சாலை அப்பகுதி மக்களின் 10ஆண்டு கால கோரிக்கை என்பதால் சாலை அமைக்கும் பணிக்கான பூமி பூஜையில் அப்பகுதி மக்கள் திரளாக கலந்து கொண்டு தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

# சீர்காழி அருகே சூரக்காடு கூப்பிடுவான் உப்பானாற்றில் கொட்டப்படும் இறைச்சி கழிவுகள் இறந்த கால்நடைகளையும் வீசிச் செல்லும் அவலம்

## கரையோர கிராமங்களின் நீர் ஆதாரத்தை பாதுகாக்க அரசுக்கு கோரிக்கை



சீர்காழி , ஜூலை 20–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே சூரக்காடு பகுதியில் அஅமைந்துள்ள கூப்பிடுவான் உப்பனாற்றின் உள்ளே ஆடு, கோழி, மாடு ஆகிய இறைச்சி கழிவுகள் குவியல் குவியலாக கொட்டப்பட்டு வருகிறது.

மேலும் இறந்த கால்நடைகளையும் ஆற்றின் உள்ளே வீசி சென்ற அவலம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் கடும் துர்நாற்றத்துடன் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு அவ்வழியே சாலைகளில் செல்வோர் அவதியடைந்து வருகின்னர். சுற்றியுள்ள குடியிருப்பு வாசிகளும் மிகுந்த இன்னலுக்கு ஆளாகி வருகின்றனர்.

இறைச்சி கழிவுகள் ஆற்றில் கலப்பதால் நிலத்தடி நீர் ஆதாரம் பாதிக்கப்படுவதுடன் தொற்று நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இரவு நேரங்களில் இறைச்சி கழிவுகளை பலர் இங்கு வந்து கொட்ச்செல்வதால் அதனை தடுக்க முடியாமல் இப்பகுதி மக்கள் தவித்து வருகின்னர்.

சாதாரண மழை பெய்தால் கூட ஒட்டு மொத்த கழிவுகளும் ஆற்றில் செல்லும் சூழல் ஏற்பட்டுள்ளதால் இந்த தண்ணீரை நம்பியுள்ள கரையோர கிராமமக்களின் நீர் ஆதாரமும் கேள்விக்குறி ஆகியுள்ளது.

30கோடியில் தடுப்பணை கட்டியும் தண்ணீரை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது இந்த தண்ணீரை பருகும் கால்நடைகள் நோய் தொற்றுக்கு உள்ளாகி வருவதாகவும் கரையோர கிராமங்களில் நிலத்தடி நீர் பாதிக்கபட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே பொதுபணித்துறை அதிகாரிகள் உரிய ஆய்வு செய்து சூரக்காடு கூப்பிடுவான் உப்பனாற்றில் இறைச்சி கழிவுகளை கொட்டும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் ஆற்றில் கொட்டப்பட்டுள்ள கழிவுகளை அகற்றவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சென்னையில் கடந்த 2 மாதங்களில் ரூ.120 கோடி மதிப்பிலான சாலைப்பணிகள் நிறைவு



சென்னை , ஜூலை 20–

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த இரண்டு மாதங்களில் ரூ.99 கோடி மதிப்பீட்டில் 169 கி.மீ. நீளத்தில் 897 தார்சாலைப் பணிகளும், ரூ.20.69 கோடி மதிப்பீட்டில் 24 கி.மீ. நீளத்தில் 196 சிமெண்ட் கான்கிரீட் சாலைப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகராட்சியில் 2023–24ம் நிதியாண்டில் ரூ.433.28 கோடி மதிப்பீட்டில் 3,676 எண்ணிக்கையிலான 645.60 கி.மீ. நீளமுடைய சாலைப் பணிகள் மேற்கொள்ள ஒப்பங்கள் கோரப்பட்டது. இதில் தற்போது கடந்த இரண்டு மாதங்களில் ரூ.99 கோடி மதிப்பீட்டில் 169 கி.மீ. நீளத்தில் 897 எண்ணிக்கையிலான தார்சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், ரூ.20.69 கோடி மதிப்பீட்டில் 24 கி.மீ. நீளத்தில் 196 சிமெண்ட் கான்கிரீட் சாலைப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பெருங்குடி மண்டலத்துக்கு உட்பட்ட மடிப்பாக்கம், ஆலந்தூர் மண்டலத்துக்கு உப்பட்ட மணப்பாக்கம் மற்றும் வளசரவாக்கம் மண்டலத்துக்கு உட்பட்ட வளசரவாக்கம் பகுதிகளில் அமைக்கப்பட்டுவரும் சாலைப் பணிகளை விரைந்து முடிக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த இரண்டு மாதங்களில் கொசஸ்தலையாறு வடிநில திட்ட நிதியின் கீழ் கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் 703 கி.மீ. நீளத்தில் அமைக்கப்பட்டு வரும் ஒருங்கிணைந்த மழைநீர்வடிகால் பணிகளில் 119.57 கி.மீ. நீளத்துக்கும், கோவளம் வடிநில திட்ட நிதியின் கீழ் கோவளம் வடிநிலப் பகுதியில் 160 கி.மீ. நீளத்தில் அமைக்கப்பட்டு வரும் ஒருங்கிணைந்த மழைநீர்வடிகால் பணிகளில் 48 கி.மீ. நீளத்துக்கும், மாநிலப் பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் 60 கி.மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளில் 2.55 கி.மீ. நீளத்துக்கும், சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் 7.40 கி.மீ. நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளில் 2.77 கி.மீ. நீளத்துக்கும், சென்னை மெட்ரோ ரயில் நிறுவன நிதியின் கீழ் 1 கி.மீ. நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளில் 0.39 கி.மீ. நீளத்துக்கும் தொடர்ந்து பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பில் வருகின்ற சுதந்திர தின விழாவினை

# பாதுகாப்பாக நடத்துவது தொடர்பாக மாவட்ட கலெக்டர், தலைமையில் முதல் நிலை ஆலோசனைக் கூட்டம்



**காரைக்கால் , ஜூலை 20–**

காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பில் வருகின்ற ஆகஸ்ட் மாதம் 15–ஆம் தேதி நடைபெற உள்ள சுதந்திர தின விழாவினை மிக சிறப்பாகவும் பாதுகாப்பாகவும் நடத்துவது தொடர்பாக காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன், தலைமையில் முதல் நிலை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆலோசனை கூட்டத்தில் காரைக்கால் மாவட்ட துணை ஆட்சியர் த ஜான்சன், காரைக்கால் மாவட்ட பேரிடர் மேலாண்மை துணை ஆட்சியர் பாஸ்கரன், காரைக்கால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், காரைக்கால் நகராட்சி ஆணையர், வட்டார வளர்ச்சி அதிகாரி, பொதுப்பணித்துறை அதிகாரிகள், கல்வித்துறை முதன்மை கல்வி அதிகாரி, நல வழித் துறை துணை இயக்குனர், மருத்துவ கண்காணிப்பாளர், பொது மருத்துவமனை உள்ளிருப்பது அதிகாரி, விவசாயி நலத்துறை கூடுதல் இயக்குனர், கடலோர காவல் படை கமண்டன்ட், செய்தி மற்றும் விளம்பர துறை உதவி இயக்குனர், வட்டாரப் போக்குவரத்து அதிகாரி, தீயணைப்பு நிலைய அதிகாரி, மீனவர் மற்றும் மீன் வளத்துறை அதிகாரி, என்.எஸ்.எஸ். ஒருங்கிணைப்பாளர், என்சிசி கமாண்டன்ட் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் இந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் சுதந்திர தின விழா 2023 மிகச் சிறப்பாக மாவட்ட அளவில் கொண்டாடுவது தொடர்பாகவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாகவும், சம்பந்தப்பட்ட துறைகளின் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

# ஆவுடையார்கோவிலில் தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி வட்டாரக் கிளையின் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம்



ஆவுடையார்கோவில், ஜூலை.20–

தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி ஆவுடையார்கோவில் வட்டாரக் கிளையின் சார்பாக ஆவுடையார்கோவில், வட்டார கல்வி அலுவலகம் முன்பாக 2012 டிசம்பர் மாதத்தில் பணியேற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கு பத்து ஆண்டுகளுக்கு மேல் நிறைவுற்ற நிலையில் தேர்வு நிலை ஊதியம் வழங்காத நிலையைக் கண்டித்தும் வட்டார கல்வி அலுவலர்களின் அலட்சிய மற்றும் பாரபட்ச போக்கைக் கண்டித்தும் கண்டன ஆர்ப்பாட்டம் வட்டாரத் தலைவர் முத்துக்குமார் தலைமையில் நடைபெற்றது.

வட்டாரச்செயலாளர் மு.சண்முகசுந்தரம் கோரிக்கை விளக்கவுரை ஆற்றினார் கல்வி மாவட்ட தலைவர் கண்ணையா வாழ்த்துரை வழங்கினார் ஆர்ப்பாட்டத்தில் ஆசிரியர்கள் செ.ரவி, செ.மதி, கு.பாலசுப்பிரமணியன், எட்வர்ட் ராஜா மான்சிங், சிவகுமார், ஹேமலதா, ராஜேஸ்வரி, மங்கை மற்றும் பல ஆசிரியர்கள் கலந்து கொண்டனர், இதில் வட்டார பொருளாளர் கண்ணதாசன் நன்றி கூறினார்.

# பழைய நாடாளுமன்றக் கட்டிடத்திலேயே கூடுகிறது மழைக்கால கூட்டத் தொடர்



**புதுடெல்லி , ஜூலை 20–**

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் பழைய நாடாளுமன்றக் கட்டிடத்திலேயே இன்று கூட உள்ளது.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் இன்று கூட உள்ள நிலையில், அது பழைய நாடாளுமன்றக் கட்டிடத்தில் கூடுமா அல்லது புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தில் கூடுமா என்ற கேள்வி மிகுந்த முக்கியத்துவம் பெற்றது. இந்நிலையில், மழைக்கால கூட்டத் தொடர் பழைய நாடாளுமன்றக் கட்டிடத்தில்தான் தொடங்க உள்ளது.

இது குறித்து பேட்டி அளித்த கோவை நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜன், "மழைக்கால கூட்டத் தொடர் எந்த நாடாளுமன்றக் கட்டிடத்தில் நடக்க இருக்கிறது என்பது தொடர்பாக ஊடகங்களில் மாறுபட்ட தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால், நாளை கூடவுள்ள மழைக்கால கூட்டத் தொடர் வழக்கம்போல் பழைய நாடாளுமன்றக் கட்டிடத்தில்தான் கூட உள்ளது.

புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தில் பணிகள் இன்னும் முழுமையாக நிறைவடையவில்லை என்றும், பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. எனவே, அது எப்போது முடியும் என்பது குறித்து அரசு தரப்பில் இன்னும் தெளிவாகத் தெரிவிக்கவில்லை.

மழைக்கால கூட்டத் தொடர் பழைய நாடாளுமன்றக் கட்டிடத்தில் தொடங்கினாலும், தொடர் முடிவடைவதற்குள் புதிய நாடாளுமன்றக் கட்டிடத்திற்குள் மாற்றம் செய்யப்பட்டுவிடும் என்பதாக சில ஊடகங்களில் செய்தி வெளியாகி இருக்கிறது. ஆனால், அது இன்னும் உறுதிப்படுத்தப் படவில்லை.

இந்த தொடர் முடிவடைவதற்குள் புதிய நாடாளுமன்றக் கட்டிடப் பணிகள் முடிவடையுமா என்ற சந்தேகம் உள்ளது. ஒருவேளை அவ்வாறு முடிவடையாமல் போனால், இந்த மழைக்காலக் கூட்டத் தொடர் முழுவதுமே பழைய நாடாளுமன்றக் கட்டிடத்தில்தான் நடக்கும்" என்று தெரிவித்தார்.

# அக்டோபர்–2 காந்தி ஜெயந்தியை முன்னிட்டு பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான கட்டுரைப் போட்டி அகில இந்திய மகாத்மா காந்தி சமூக நலப்பேரவை அறிவிப்பு

**புதுக்கோட்டை , ஜூலை 20–**

அக்டோபர்–2 காந்தி ஜெயந்தியை முன்னிட்டு பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான கட்டுரைப் போட்டியை அகில இந்திய மகாத்மா காந்தி சமூக நலப்பேரவை அறிவித்துள்ளது. இதுகுறித்து காந்திப் பேரவையின் நிறுவனர் வைர.ந.தினகரன் வெளியிட்ட செய்திதிக்குறிப்பில்:–

ஆண்டுதோறும் அண்ணல் மகாத்மா காந்தியின் பிறந்த தினத்தை அகில இந்திய மகாத்மா காந்தி சமூக நலப்பேரவை காந்தியத் திருவிழாவாக கொண்டாடி வருகிறது. அதனை முன்னிட்டு பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான கட்டுரைப் போட்டியும், மாவட்ட அளவிளான பல்வேறு கலைப் போட்டிகளையும் நடத்தும் பொருட்டு முதல் கட்டமாக மாநில அளவிலான கட்டுரைப்போட்டி அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிக்கான தலைப்பு கடனில்லா தமிழகமும், வறுமையில்லா மக்களும் உருவாக "அரசும், மக்களும் பின்பற்றவேண்டிய காந்திய வழி தீர்வுகள்"; இதில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ.3000மும் இரண்டாம் பரிசாக ரூ.2000மும் மூன்றாம் பரிசாக ரூ.1000மும் 10 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும். பள்ளி (9ஆம் வகுப்புமுதல் 12ஆம் வகுப்பு வரை) மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிக்கான தலைப்பு

ஊழல், லஞ்சம், மது போதைகளற்ற தமிழகம் உருவாக "அரசும், மக்களும் பின்பற்றவேண்டிய காந்திய வழி தீர்வுகள்"; இதில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ.2000மும் இரண்டாம் பரிசாக ரூ.1500ம் மூன்றாம் பரிசாக ரூ.1000மும் வழங்கப்படும். மேலும் 10 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.என்றும். போட்டிக்கான விதிமுறைகள் கட்டுரை ஏ4 தாளில் 6 பக்கங்களுக்கு மிகாமலும், சுயசிந்தனையுடன் இருக்க வேண்டும். கல்லூரி முதல்வர், பள்ளி தலைமையாசிரியர் தங்கள் கல்லூரி, பள்ளியில் போட்டி நடத்தி அதில் முதல் இரண்டு கட்டுரைகளை தேர்வு செய்து அனுப்பவேண்டும். கல்லூரி, பள்ளி முதல்வரின் ஒப்புதல் மற்றும் அடையாள அட்டையின் நகல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். கல்லூரி, பள்ளி முகவரி மற்றும் மாணவ,களின் முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். போட்டியின் முடிவுகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

கட்டுரைகளை அகில இந்திய மகாத்மா காந்தி சமூக நலப்பேரவை, 3473 - 1 தெற்கு 2ஆம் வீதி, புதுக்கோட்டை - 622001 என்ற முகவரிக்கு வருகின்ற 30.08.2023க்குள் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

போட்டி முடிவுகள் 21.09.2023 அன்று அறிவிக்கப்படும். பரிசுகள் அக்டோபர் 2,2023 அன்று புதுக்கோட்டையில் நடைபெறும் காந்தியத் திருவிழாவில் வழங்கப்படும். மேலும் விபரங்களுக்கு 9443488752, 04322–222337 என்ற எண்களிலோ, gandhiperavai @gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ தொடர்பு கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நடப்போம் நலம் பெறுவோம் திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை நகராட்சியில் இடம் தேர்வு அமைச்சர்கள் பங்கேற்பு

**புதுக்கோட்டை, ஜூலை. 20–**

நடப்போம் நலம்பெறுவோம் திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை நகராட்சி, திலகர் திடலிலிருந்து,மாலையீடு, விளாக்குடி பேருந்து நிறுத்தம் வரையில் தமிழக அமைச்சர்கள் மூன்று பேர் பங்கேற்று 8 கிலோ மீட்டர் தூரம் நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதையை தேர்வு செய்து உறுதி படுத்துவதற்கான ஆய்வு மேற்கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகராட்சி, திலகர் திடலிலிருந்து, தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் விரைவில் தொடங்கப்படவுள்ள நடப்போம் நலம்பெறுவோம் திட்டத்தின் கீழ், மாலையீடு, விளாக்குடி பேருந்து நிறுத்தம் வரையில் நேற்று சட்ட அமைச்சர் எஸ். ரகுபதி மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சுற்றுச்சூழல்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் ஆகியோர்8கிலோமீட்டர் தூரம் நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதையை தேர்வு செய்து உறுதி படுத்துவதற்கான ஆய்வு மேற்கொண்டனர்.

இந்நிகழ்வு மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, முன்னிலையில் நடைபெற்றது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மக்கள் அனைவரும் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற அடிப்படையில் மருத்துவத்துறையின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறார். அதன்படி, வரும்முன் காப்பதே சால சிறந்தது என்ற அடிப்படையில் நடைப்பயிற்சியின் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாதந்தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமையில் நடப்போம் நலம் பெறுவோம் என்ற திட்டத்தினை செயல்படுத்த சட்டமன்றத்தில் அறிவித்திருந்தார்.

உலக சுகாதார அமைப்பின் தரவுகள்படி, உடற்பயிற்சி செய்வது நீரிழிவு,இரத்த அழுத்தம், இதய நோய் தாக்கத்தை குறைக்கின்றது. மேலும் நடைப்பயிற்சி மூலம் மக்கள் சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமான எடையுடன் இருக்கவும், நாள்பட்ட உடல் பிரச்சனைகள் மற்றும் மன அழுத்தத்தை குறைக்க உதவுகிறது. எனவே தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து 8 கி.மீட்டர் தூரம் கொண்ட நடைப்பாதை கண்டறிந்து ஆரோக்கிய நடைப்பயிற்சி மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி இன்றையதினம் அமைச்சர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்போம் நலம்பெறுவோம் திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை நகராட்சி, திலகர் திடலிலிருந்து, மாலையீடு, விளாக்குடி பேருந்து நிறுத்தம் வரையிலான 4 கிலோ மீட்டர் தூரம் சென்று மறுபடியும் துவங்கிய இடத்திற்கேவருகைதந்து 8 கிலோ மீட்டர் தூரம் நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதையை தேர்வு செய்து உறுதி படுத்துவதற்கான ஆய்வு மேற்கொண்டனர்.

மேலும் இந்த ஆய்வில், நடைப்பயிற்சி மேற்கொள்பவர்களுக்கு எவ்வித சிரமமுமின்றி சாலையின் இருபுறமும் மரங்கள் இருக்கும் வகையிலும், ஆசுவாசப் படுத்திக்கொள்ள உரிய ஏற்பாடுகள் உள்ளனவா என்பது குறித்தும், சாலையில் போக்குவரத்து நெரிசல்கள் இல்லாத வகையில் உள்ளனவா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது சாலையில் நடைப்பயிற்சி மேற்கொண்டவர்களுக்கு மருத்துவத்துறையின் சார்பில் 6 இடங்களில் குடிநீர் வழங்கியும் மற்றும் 2 இடங்களில் மருத்துவ முகாம் நடத்தியும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே, , புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். வை.முத்துராஜா, பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை செல்வவிநாயகம், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிதைப்பித்தன், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் சந்திரசேகர், நகர்மன்ற துணைத்தலைவர் லியாகத்அலி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் பார்த்தசாரதி, துணை இயக்குநர்கள் ராம்கணேஷ் (புதுக்கோட்டை), நமச்சிவாயம் (அறந்தாங்கி), புதுக்கோட்டைவருவாய் கோட்டாட்சியர் (பொ) சிவக்குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மதியழகன், வட்டாட்சியர் விஜயலெட்சுமி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை கம்பன் கழகத்தின் 48 ஆம் ஆண்டு கம்பன் பெருவிழா புதுக்கோட்டை நகர்மன்ற வளாகத்தில் ஜூலை 14ஆம் தேதி வெள்ளிக்கிழமை தொடங்கியது. 6ம் நாள் விழாவிற்கு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் தலைமை வகித்தார். டாக்டர் ஜெய ராஜமூர்த்தி சிறப்பு விருந்தினராக பங்கேற்று எழிலுறையாற்றினார். நிகழ்வில் கம்பன் கழக தலைவர் ராமச்சந்திரன், செயலாளர் சம்பத்குமார், புதுக்கோட்டை எம்எல்ஏ முத்துராஜா உள்ளிட்ட கலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

# திருமயம் ஒன்றியத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கார்த்திக் பா.சிதம்பரம் சுற்றுப்பயணம்

திருமயம்,ஜூலை.20–

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் ஒன்றியத்தில் சிவகங்கை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கார்த்திக் சிதம்பரம் மற்றும் தெற்கு மாவட்ட தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ராமசுப்புராம் தெற்கு வட்டாரத் தலைவர் மணிகண்டன் ராமையா வடக்குவட்டாரத்தலைவர் முருகேசன் ஆகியோர் குருவிகொண்டான்பட்டி, ராங்கியம், மிதலைபட்டி, சங்கம்பட்டி, ஆத்தூர், குழிபிறை,பனையப்பட்டி, நச்சாந்துபட்டி ஆகிய இடங்களில் பொதுமக்களை சந்தித்து குறைகளை கேட்டு அறிந்தார், பொதுமக்கள் கொடுத்த மனுக்களை பெற்றோர், மேலும் பாஜகவை எதிர்த்து பலமான கூட்டணி அமைக்க வேண்டும் என்பதே காங்கிரஸின் நோக்கம் அகில இந்திய தலைவர் கூறியது போல வலுவான கூட்டணி அமைப்பது தான் எங்கள் குறிக்கோள்.



கூட்டணி என்பது எளிதில் அமைந்து விடாது தமிழ்நாடு, பீகார்,மகாராஷ்டிரா எளிதில் கூட்டணி அமைந்துவிடும்மற்றுமுள்ள மாநிலங்களில் சில பேச்சுவார்த்தைகளினால் கூட்டணி அமையும் நான் பலதடவை கூறியதுபோல அமலாக்கத்துறை என்ற அமைப்பு இந்தியாவுக்கு தேவை கிடையாது என குறிப்பிட்டார் சுற்று பயணத்தில் மாநில சிறுபான்மை பிரிவு அக்பரலி,க.மாணிக்கவேலு, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சின்ன கருப்பன், மாவட்ட செயலாளர் சத்தியமூர்த்தி நகரத் தலைவர்மாவட்ட எஸ்.சி பிரிவு தலைவர் பெருமாள் அன்பு,கேப்டன் சண்முகவேல்

வையாபுரி, பழனியாண்டி,பாண்டியன் டைலர் சானாஸ் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர் ஒவ்வொரு ஊரிலும் பொதுமக்கள் வரவேற்றனர்.

# புதுக்கோட்டையில் அமலஅன்னை மெட்ரிக் பள்ளி மாணவி கட்டுரைப் போட்டியில் மாவட்ட அளவில் சாதனை

**புதுக்கோட்டை, ஜூலை.20–**

புதுக்கோட்டை மாவட்டம் தமிழ் வளர்ச்சித்துறை நடத்திய கட்டுரை போட்டியில் மாவட்ட அளவில் இரண்டாம் இடத்தை பிடித்த பொன்னமராவதி அமல அன்னை மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 12ம் வகுப்பு மாணவி நிவேதா. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யா-விடம் ரூபாய் 7000த்திற்கான காசோலை மற்றும் சான்றிதழையும் பெற்றார்.



இதனை அடுத்து அமல அன்னை மெட்ரிக் மேல்நிலை பள்ளிக்கும் மற்றும் பொன்னமராவதி பகுதிக்கு பெருமைசேர்த்த நிவேதா விற்கு பள்ளியின் முதல்வர் மரியபுஷ்பம், மற்றும் அப்பள்ளிஆசிரியர் பிரின்ஸ் இளவரசன், மற்றும் பொன்னமராவதி, பொதுமக்கள் மற்றும் செய்தியாளர்கள், என ஏராளமானோர் வாழ்த்தி பாராட்டுகளை தெரிவித்தனர்.



புதுக்கோட்டை மாவட்டத்தில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் செயல்படுத்துவது குறித்து, அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம், நில நிர்வாக ஆணையர் நாகராஜன், தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, முன்னிலையில், மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதப்பிரியா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தங்கவேல், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இராஜேந்திர பிரசாத் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# தஞ்சை மாநகராட்சியில் 30 பேருக்கு மஞ்சள் காமாலை பாதிப்பு சுகாதாரமற்ற குடிநீரால் ஏற்பட்டதாக பொதுமக்கள் புகார்

தஞ்சாவூர் , ஜூலை. 20–

தஞ்சாவூரில், 30 பேருக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில், பாதிக்கப்பட்ட பகுதியில் சிறப்பு மருத்துவ முகாம் அமைத்து மாநகராட்சி டாக்டர்கள் கண்காணித்து வருகின்றனர்.



தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட 33வது வார்டு கோரிகுளம் மற்றும் 36வது வார்டு பூக்கார வடக்கு தெருவில், கடந்த சில நாட்களாக, அப்பகுதியைச் சேர்ந்த சிலருக்கு திடீரென காய்ச்சல்,வாந்திபோன்றபாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றபோது, அவர்களுக்கு மஞ்சள் காமாலை நோய்க்கான அறிகுறி இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சுமார் 15-க்கும் மேற்பட்ட சிறுவர், சிறுமிகள் உட்பட கோரிக்குளம் பகுதியில் 16 பேரும், பூக்கார வடக்கு தெருவில் 14 பேரும் மஞ்சள் காமாலை நோய் தாக்குதலுக்கு ஆளாகி அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றனர்.

இதையடுத்து, மாநகராட்சி சார்பில், மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்ட நபர்கள் உள்ள கோரிக்குளம், பூக்காரவடக்கு தெருவில் சிறப்பு மருத்துவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அப்பகுதியில் உள்ள மக்களுக்கு காய்ச்சல், ரத்தம், சிறுநீர் மாதிரிகள் எடுக்கப்பட்டும், காய்ச்சல் அறிகுறி உள்ளவர்களுக்கும், வீடு வீடாகவும் மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகிறது. இப்பணியை மாநகராட்சிமேயர் ராமநாதன், மாநகராட்சி நகர் நல அலுவலர் சுபாஷ்காந்தி ஆகியோர் கண்காணித்து வருகின்றனர்.

இது குறித்து பொதுமக்கள் கூறியதாவது; குடிநீர் கழிவு நீருடன் கலந்து சுகாதாரமற்ற முறையில் வருகிறது. மாநகராட்சி ஊழியர்கள் முறையாக குடிநீர் தொட்டி, சாக்கடை பகுதிகளை சுத்தம் செய்வது இல்லை. சுகாதாரமற்ற குடிநீரை குடித்ததால் தான் குழந்தைகள் உட்பட பலருக்கும் மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டுள்ளது. இது குறித்து வார்டு கவுன்சிலர்களிடம் பலமுறை கூறியும் நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும், மாநகராட்சி மருத்துவமனையில் குழந்தைகளை காய்ச்சலுக்காக காண்பித்த போது டாக்டர்கள் எதுவும் இல்லை எனக் கூறி அனுப்பிவிட்டனர். ஆனால், காய்ச்சல் குறையாத நிலையில், தனியார் மருத்துவனையில் காண்பித்த போது மஞ்சள் காமாலை இருப்பதாக தெரிந்தது இவ்வாறு தெரிவித்தனர்.

இது குறித்து மாநகராட்சி மேயர் நிருபர்களிடம் கூறியதாவது; "குடிநீருடன் சாக்கடை கழிவு நீர் கலந்து வருவதாக பொதுமக்கள் சொல்லுகிறார்கள். முழுமையாக ஆய்வு செய்து விட்டோம். அப்படி எதுவும் இல்லை. இருப்பினும், இப்பகுதியில் குடிநீரை சேகரித்து ஆய்வுக்கு அனுப்பி உள்ளோம். அந்த அறிக்கை வந்த பிறகு அதன் தொடர்பான பணிகளை மேற்கொள்ள உள்ளோம். இரண்டு வார்டுகளிலும் நான்கு பகுதிகளில் தலா 10 பேர் கொண்ட மருத்துவக்குழுவினர் கொண்ட முகாம் அமைக்கப்பட்டு கண்காணித்து வருகிறோம். அத்துடன், வீடு வீடாக சென்று மக்களுக்கு மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகிறது" இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# வன்னியர் சங்க மாநில செயலாளர் ஆண்டிமடம் வைத்தி நியமனம்



அரியலூர், ஜூலை.20–

வன்னியர் சங்க மாநில செயலாளராக, ஆண்டிமடம் வைத்தி நியமனம் செய்யப்பட்டுள்ளார், இது பற்றி வன்னியர் சங்கத்தின் மாநில தலைவர் பு.தா. அருள்மொழி வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ், அதன் தலைவர் மற்றும் முன்னாள் மத்திய அமைச்சர் அன்புமணி ராமதாஸ் ஆகியோரின் ஒப்புதலோடு, அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டம், பெரிய தத்தூர் கிராமத்தைச் சேர்ந்த வைத்தி என்கிற வைத்திலிங்கம், வன்னியர் சங்கத்தின் மாநிலச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு, நமது வன்னியர் சங்கம் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட அனைவரும், முழு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன், இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# போதுமான ஆவணங்கள் இல்லாமல் பொதுநல மனு தாக்கல் செய்தால் அபராதம் உயர் நீதிமன்றம் எச்சரிக்கை

மதுரை , **ஜூலை. 20–**

போதுமான ஆவணங்கள் இல்லாமல் பொதுநல மனு தாக்கல் செய்தால் அபராதம் விதிக்கப்படும் என உயர் நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நெல்லை கூனியூரைச் சேர்ந்த சமூக ஆர்வலர் சுந்தரவேல், உயர் நீதிமன்றக் கிளையில் தாக்கல் செய்த மனு: நெல்லை மாவட்டம் களக்காடு நவநீதகிருஷ்ணன் கோயில் தெப்பக்குளம், சேரன்மகாதேவி ரயில் நிலையம், கல்லிடைக்குறிச்சி ரயில் நிலையம் முதல் கன்னடியன் கால்வாய் பாலம் வரை மற்றும் அம்பாசமுத்திரம் வளைவுமுதல் அம்பாசமுத்திரம் ரயில்வே கேட் வரை உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்து நீதிபதிகள் எஸ்.எஸ். சுந்தர், டி.பரத சக்கரவர்த்தி அமர்வு பிறப்பித்த உத்தரவு: பொது நல மனுக்களை விளம்பரத்துக்காக தாக்கல் செய்யக்கூடாது. பொது நல மனுக்கள் தாக்கல் செய்வதற்கு முன்பு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை தொடர்பாக மனு அளிக்க வேண்டும். வழக்குகளை தாக்கல் செய்வதற்கு முன், தொடர்புடைய அதிகாரிகளிடம் மனு அளிக்க வேண்டும்.

அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் தேவையான ஆதாரங்கள், புள்ளி விபரங்களுடன் பொதுநல மனு தாக்கல் செய்யலாம். போதிய ஆவணங்கள் இல்லாமல் பொதுவான கோரிக்கைகளை முன்வைத்து பொது நல வழக்கு தாக்கல் செய்தால் அபராதம் விதிக்கப்படும். இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. இவ்வாறு நீதிபதிகள் உத்தரவில் கூறியுள்ளனர்.

# கறம்பக்குடியில் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி சாலைமறியல்

**கறம்பக்குடி, ஜூலை. 20–**

கறம்பக்குடி அருகே புதுப்பட்டியில் கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி சாலை மறியலில் ஈடுபட்டனர், இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.



புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா பல்லவராயன்பத்தை ஊராட்சி ஆத்தியடிப்பட்டியில் சுமார் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர், அப்பகுதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பொது நியாய விலை கடை கட்டிடம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்தும் ஊராட்சியில் இடத்திற்கு தீர்மானம் நிறைவேற்றியும் வருவாய்த்துறை இடம் ஒதுக்கீடு செய்யாததை கண்டித்தும், பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை அகற்றி புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்து தரக்கோரி ஊராட்சி நிர்வாகம் மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் பல முறை மனு அளிக்கப்பட்டது.

ஆனலும் இன்று வரை நடவடிக்கை எடுக்காத ஊராட்சி நிர்வாகம் மற்றும் மாவட்ட நிர்வாகத்தை கண்டித்தும், ஆத்தியடிப்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு சுற்று சுவர் கட்ட கடந்த 2020 2021 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி வழங்கியும் இதுவரை சுற்றுச்சுவர் கட்டி தரப்படாததைகண்டித்தும், 2018 ஆம் ஆண்டு ஏற்பட்ட கஜா புயலில் சேதமடைந்த மின்மாற்றியை மாற்றி தரக்கோரி பலமுறை முறையிட்டும் இதுவரை மாற்றி தராத மின்சார வாரியத்தை கண்டித்தும், ஆத்தியடிப்பட்டி கிராமத்திற்குள் வந்து செல்லும் அரசு நகர பேருந்து A4 தினசரி சரியான நேரத்திற்கு இயக்கப்படாததை கண்டித்தும் அப்பகுதி பெண்கள் உள்பட 50க்கும் மேற்பட்டோர் புதுக்கோட்டைகறம்பக்குடி சாலை புதுப்பட்டி மூவர் ரோட்டில் திடீர் சாலை மறியல் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சாலை மறியலில் ஈடுபட்டவர்களிடம் கறம்பக்குடி வட்டாட்சியர் இராமசாமி, ஆலங்குடி காவல் துணை கண்காணிப்பாளர் தீபக் ரஜினி ஆகியோர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இதில் கோரிக்கைகள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் கூறியதையடுத்து போராட்டத்தைகைவிட்டு பொதுமக்கள் கலைந்து சென்றனர்.சாலை மறியல் போராட்டத்தினால் கறம்பக்குடி புதுக்கோட்டை சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# பரபரப்பான சூழலில் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது

# புதுகை வரலாறு குற்றச்சாட்டு எதிரொலி டாஸ்மாக் நிர்வாகம் கடைகளுக்கு எச்சரிக்கை






# குண்டர் சட்ட உத்தரவில் கலெக்டர்களுக்கே அதிகாரம் : தமிழக அரசு

சென்னை / புதுக்கோட்டை | 20.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

முு. சிவசிதம்பரம் , ஈழத் தமிழ் அரசியல்வாதி (பி.1923) (இ.2002)



முத்து சிவலிங்கம் , இலங்கை அரசியல்வாதி (பி.1943) (இ.2022)



எஸ். ஜே. சூர்யா , தமிழகத் திரைப்பட இயக்குனர், நடிகர், தயாரிப்பாளர் (பி.1968)



## இன்றைய நினைவு நாள்

பதுகேஷ்வர் தத் , இந்திய செயற்பாட்டாளர் (பி.1910) (இ.1965)



எம். ஈ. எச். மகரூப் , இலங்கை அரசியலாவதி (பி.1939) (இ.1997)



கர்ணன் , தமிழக எழுத்தாளர் (பி.1938) (இ.2020)



## அனைத்துலக சதுரங்க நாள்